1972 மார்ச் 1]

அக்காமலை புல்வெளியில் கால்நடைப் பண்ணை

* 265 வினா—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையைச் சேர்ந்த அக்காமலை புல்வெளியில் கால்நடைப் பண்ணை ஒன்று அமைக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை.

திரு. இ. ராமசாமி: தலைவரவர்களே, 1½ ஆண்டுகளுக்கு முன்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் வந்து அந்த இடத்தைப் பார்த்து விட்டுச் சென்றார்கள். 50 ஆயிரம் ஏக்கர் புல்வெளி இருப்பதாகவும், மாடு வளர்ப்பதற்கு வசதி இருக்கிறது என்றும் சொன்னார்கள். வெளிநாட்டினர் உதவியுடன் அந்த இடத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் கால்நடைப்பண்ணை ஆரம்பிக்க இருப்பதாக ஒரு திட்டம் இருந்ததே, அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த இடமும், பல்வேறு இடங்களும் ஒவ்வொரு இடமாகப் பரிசீலனைக்குள்ளானது. பல்வேறு இடங்களிலும், எந்த இடத்தில் முதலீடு செய்தால் என்ன செலவாகும், அங்கேயுள்ள தட்ப வெட்பநிலை கால்நடை வளர்ச்சிக்கு மிகப் பொருத்தமாக இருக்குமா என்றும் ஆராயப்பட்டு வருகிறது. அதற்கான முடிவை வெளி நாட்டினரின் தொடர்போடு எடுக்கவேண்டியிருப்பதால், அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

வேலூரில் அரசு அச்சகம்

* 266 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் ஒரு அரசு அச்சகம் (Government Press அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வேலூரில் ஓர் அரசு அச்சகம் நிறுவும் செயற்குறிப்பு தற்போதைக்கு அரசிடம் இல்லை.

திரு. ஏ. சி நரசிம்மன்: தலைவரவர்களே, வேலூரில் ஒரே ஒரு கோவாபரேடிவ் பிரிண்டிங் பிரஸ் தான் இருக்கிறது. அதனிடம் வேலை கொடுத்தால் சிக்கிரமாக செய்து கொடுப்பதில்லை. எனவே அரசுத் துறையில் ஒரு அச்சகத்தை நிறுவினால், அங்கே பல வேலைகள் அதிகமாக நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அரசாங்கம் விரைவிலே அங்கே ஒரு அரசு அச்சகத்தை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு அச்சகம் ஒன்று நிறுவுவது என்பதை கொள்கையளவில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நிதி வசதியைப் பொறுத்து அது நடைமுறைப்படுத்தப்படும்.

முத்துக்குளிப்பு

* 267 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன?

(இ) முத்துக்குளிப்பவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் கொடுத்துள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:

(அ) (1) திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் வடக்கில் உள்ள வைப்பார் பெரியபாரிலிருந்து தெற்கேயுள்ள பள்ளிக்கல்லுப்பார் வரையில் 30 அடி முதல் 72 அடி ஆழம் வரையிலும்.

(2) இராமநாதபுரம் வருவாய் மாவட்டம் கடற்கரை ஓரங்களில் வடக்கேயுள்ள பாம்பன்கரைபார் தொடங்கி தெற்கேயுள்ள வெம்பார்கரைபார் வரையில் 27 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும்;

(3) இராமேஸ்வரம் தீவின் ஓரங்களில் வடக்கே 30 அடி முதல் 42 அடி ஆழம் வரையிலும்;

(4) பாக் வளைகுடாவின் மேற்குக் கடற்கரையில் 79.8' 79.12', கிழக்கு நேர் கோடுகளுக்கு இடையிலும் முத்துச்சிப்பிப் பார்கள் காணப்படுகின்றன.